# இந்திய தூதரக ஊழியர் மீது பொலிஸ் தாக்குதல்

(சென்னை)

கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் கடமை யாற்றும் ஊழியர் ஒருவர், கடுமையாகத் தாக்கப்பட்டும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டும் கைதுசெய்யப்பட்ட விடயம் தொடர்பாக இந்திய அரசாங்கம் இலங்கையிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இலங்கைப் பாதுகாப்பு அமைச்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 சித்திரை 9 ஷவ்வால் 6 இதழ்: 71

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 22-04-1991

## இராணுவ நடவடிக்கையால் இருபதினாயிரம் மக்கள் வவுனியாவில் இடப்பெயர்வு

(வவுனியா)

வவுனியாவில் இராணுவ நடவடிக்கை காரணமாகச் சுமார் 20 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். 15 ஆயிரம் பேர் மடு அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு மோதலில் 13 படையினர் மரணம்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கில் நேற்று முன்தினம் நடந்த கடும் மோதலில் 13 அரச படையினர் பலியானார்கள்:

புலிகளுக்கும், அரச படைகளுக்குமிடையில் பல்வேறு

(4-ம் பக்கம் பார்க்க)

### ★ புலிகளின் தாக்குதலை அடுத்து

# மன்னாரில் 3 இடங்களிலிருந்து இராணுவம் பின்வாங்கியது

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பரப்புக்கடந்தான், ஆண்டான்குளம், ஆட்காட்டிவெளி ஆகிய இடங்களில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர், புலிகளின் கடும் தாக்குதலைத் தொடர்ந்து நேற்றுக் காலை அவ்விடங்களில் இருந்து பின்வாங்கி மாந்தைப் பகுதிக்குச் சென்றுவிட்டனர்.

சிறிலங்கா இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த மூன்று இடங்களையும் விடுதலைப்புலிகள் சென்று பார்வையிட்டபோது, அவ்விடங்களில் இருந்து பல ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

அவற்றின் விபரம் வருமாறு:

ஜி. பி. எல். ஜி. பரல் 1
ஜி. பி. எம். ஜி. ரக லிங் குடன் 500
ஜி. பி. எம். ஜி. லிங் 220
ஜே. ஆர். கைக்குண்டு 6
ரிமோற் கிரனேற் 01
ரீ. எம். ரீ. கைக்குண்டு 1
எவ். என். சி. மகசின் 04
5.56 ரவை 820
மினி மினி லிங் 2757
50 கலிபர் லிங் 1076
5.26 ரக லிங்குடன் 67
டயர் ரோல் 03
எல். 3 லிங் 20
செயின் பெட்டி 10
பைனகுலர் 01

(ஈ)

## வன்னிப் பிராந்தியம்: அன்னை பூபதியின் அஞ்சலி நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

இந்திய ஆக்கிரமிப்புஇராணுவம் தமிழீழத்தில் மேற்கொண்ட யுத்தத்தை தடுத்து நிறுத்திட தமிழீழ மக்கள் சார்பில் அகிம்சைபோர் தொடுத்து உண்ணாநோன்பு இருந்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் 3ம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பாகவன்னிப் பிராந்தியத்தில் நடைபெற்றது.

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியின் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்திலும், கலை நிகழ்வுகளிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டதுடன் இல்

(4-ம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளத்தில் துப்பாக்கி சூடு 3 பொதுமக்கள் பலி; 11 பேர் காயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தாண்டிக்குளம் இராணுவ முகாமுக்கும் காமினி மகா வித்தியாலயத்துக்குமிடையில் நின்றபொதுமக்கள் மீது நேற்றுமுன்தினம் காலை புளொட் உறுப்பினர்கள் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 3 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; 11 பேர் படுகாயம் அடைந்தனர்.

காயமடைந்த 11 பொதுமக்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் 21 சிங்களவர் கொலை

(மட்டுநகர்)

கிழக்கு மாகாணத்தில் 21 சிங்களவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினமிரவு கிராமமொன்றில் திடீரென

(4-ம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. [உயர்தர] பரீட்சை நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் நாளை செவ்வாய்க்கிழமை கல்விப் பொதுத்தராதர உயர்தர விசேட பரீட்சை ஆரம்பமாகின்றது.

(4-ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் மீண்டும் அமெதி தொகுதியில் போட்டி

[புதுடில்லி]

இந்திரா காங்கிரஸ்கட்சி, லோகசபைத் தேர்தலுக்கான 210 வேட்பாளர்களின் பட்டியலை நேற்று வெளியிட்டது.

காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ராஜீவ் காந்தி மீண்டும் அமெதி தொகுதியில் போட்டியிடுவதெனத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

### அரசு - புலிகள் பேச்சு:

## வலிமைமிக்க நாடொன்றின் மத்தியஸ்தத்துடன் நடைபெறவேண்டும்

(சென்னை)

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏதாவது பேச்சு நடக்குமானால் வலிமை மிக்க பெரிய நாடொன்றின் மத்தியஸ்தத்துடனேயே நடைபெற வேண்டுமென்று புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) சென்னையிலிருந்து வெளிவரும் இந்துப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:

''வடக்கு கிழக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும்

(4-ம் பக்கம் பார்க்க)

## மேதின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மே தினத்தை முன்னிட்டு தமிழ் ஈழ ஆய்வு நிறுவனம் கடற்றொழில், விவசாயம், கைத்தொழில் மற்றும் உணவு உற்பத்தித் துறைக் கான

(4-ம் பக்கம் பார்க்க)

## விறகு வெட்டச் சென்ற மூவர் சுட்டுக் கொலை

(மட்டுநகர்)

அக்கரைப்பற்று அளிக்கம்பைப்பகுதியில் விறகு வெட்டச் சென்ற மூவர் ஸ்ரீலங்கா அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக ஆலையடி வேம்பு பிரஜைகள் குழுவிற்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

இது போன்ற சம்பவம் ஒன்று கடந்த மாதத்திலும் இப்பகுதியில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தில் இறந்தமூவரும் கோளாவில் கிராமவாசிகள் என்றும் இப்பகுதியில் விறகு வியாபாரம் செய்பவர்கள் என்றும் கூறப்படுகிறது.

(ரி)

## பரந்தன் இரசாயன ஆலை மூடப்படமாட்டாது

(கொழும்பு)

பரந்தன் ரசாயன தொழிற்சாலையை மூடும் திட்டம் எதுவும் இல்லை என்று அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கூறினார்.

புதிதாக ரசாயன தொழிற்சாலை வேறுபகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டாலும் பரந்தன் தொழிற்சாலை மூடப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

[4ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வியாபார ஸ்தாபனத்திற்கு தேவையான தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சண்முகா, இல. 65 பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி 4661)

## ராகுகேது மாற்றம்

புத்தாண்டுப் பலன்கள் ரூ. 6/- எங்கும் விற்பனையாகின்றன; சத்யசாயிபாபாவின் முற்பிறப்பு, மறுபிறவி வரலாறுகள் வண்ணப்படங்களுடன் நான் யார்? ஆத்மசோதி, ஆனந்தரகசியம், எண்ஜோதிடம், ரேகை சாஸ்திரம், யோகாசனம், கனகாரேடர்ஸ், திருநெல்வேலி எழுதியவர்: பேராசிரியர் சத்தியதாஸன்; (சி-4665)

## ஏப்பரல் மாத சம்பளம்

(கொழும்புத்துறை)

யாழ் மாநகர சபை ஊழியர்களுக்கான ஏப்ரல் மாதச் சம்பளம் கடந்த 11ந்திகதி வழங்கப்பட்டுள்ளது: (154)

# நீர்வேலி கந்தசுவாமி மாம்பழத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிகந்தசாமி கோயில் மாம்பழத்திருவிழா இம்மாதம் 24-ம் திகதி பி. ப; 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை பால் காவடி உட்பட பழனியாண்டவர் அபிஷேகமும் நடைபெறும்.

இரவு 6 மணிமுதல் மின்சார தீபாலங்காரங்களுடன் புதிதாக அமைக்கப்பட்ட கைலயங்கிரி விமான உற்சவம் நடைபெறவுள்ளது.

# துர்நாற்றமடிக்கும் செம்மணி பாலவீதி

(யாழ்ப்பாணம்)

ஆடு, மாடுகளின் எலும்புத்துண்டுகள், மற்றும் கழிவுப் பொருள்கள் செம்மணிப் பால வீதி ஓரங்களில்வீசப்பட்டுள்ளதனால் இவ்வீதியில்துர்நாற்றம் வீசுவதாகப் பிரயாணிகள் கவலை தெரிவிக்கின்றனர்:

இறைச்சிக்காக வெட்டப்படும் ஆடு, மாடு போன்ற பிராணிகளின் கழிவுப்பொருள்கள் இவ்வீதியிலுள்ள பாலங்கள் மற்றும் பற்றைகளுக்குள் இறைச்சி விற்பனையாளர்களால் வீசப்பட்டு வருகின்றன.

இதனால் இவ்வீதியில் பயணம் செய்யும்போது மூக்கைப் பொத்தியபடி செல்லவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜி. சி. ஈ. (உயர்தர) விசேட பரீட்சை இறுதி அட்டவணை

(யாழ்ப்பாணம்)

ஜி. சி. ஈ. உயர்தர விசேட பரீட்சை தொடர்பான பாடநேர அட்டவணையின் இறுதிப்பகுதி நேற்று முன்தினம் வெளியானது:

நாளைஏப்ரல் 23 ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை முற்பகுதி பரீட்சை நேர அட்டவணை ஈழநாட்டில் வெளியாகியிருந்தது தெரிந்ததே;

எஞ்சிய பாடங்களுக்கான பரீட்சை அட்டவணை வருமாறு:

| | | |
|---|---|---|
| 02-5-91 | 8-30 - 11-30 | பொருளியல் II |
| | | மலாய் 11 |
| | | பேர்சிய மொழி II |
| | | ஹிந்தி II |
| | 12-30 - 3-30 | சிங்களம் I |
| 03-5-91 | 8:30 - 11-30 | கிரேக்கம் I |
| | | பிரெஞ்சு I |
| | 1-30 - 4-30 | நாடகமும் அரங்கியலும் I (தமிழ், ஆங்கிலம் சிங்களம்) |
| 04-5-91 | 8-30 - 11-30 | நாடகமும் அரங்கியலும் 11 |
| | | கிரேக்கம் II |
| | | பிரெஞ்சு II |
| | 1-30 - 4-30 | நாடகமும் அரங்கியலும் III (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) |
| 06-5-91 | 8-30 - 10-30 | பௌதிகவியல் I |
| | 8-30 - 11-30 | கணக்கியல் I |
| | | பாளி I |
| | 12-30 - 3-30 | விவசாய விஞ்ஞானம் I |
| | | ஜேர்மன் I |
| | | ருஷியன் I |
| | | உருது I |
| | | சீன மொழி I |
| | 8-30 - 11-30 | பௌதிகவியல் II |
| | | கணக்கியல் II |
| | | பாளி II |
| | | ஜேர்மன் II |
| | | ருஷியன் II |
| | | உருது II |
| | | சீனமொழி II |
| | 12-30 - 3-30 | வவிசாய விஞ்ஞானம் II |
| | | கிரேக்க உரோம நாகரீகம் II |
| 08-5-91 | 8-30 - 11-30 | சிங்களம் II |
| | 12-30 - 3-30 | இந்து சமயம் I |
| | | கிறிஸ்தவம் I |
| | | இஸ்லாம் I |
| | | சமஸ்கிருதம் I |
| 09-5-91 | 8-30 - 11-30 | சித்திரம் II |
| | | ஆங்கிலம் I |
| | 12-30 - 3-30 | இந்து சமயம் II |
| | | கிறிஸ்தவம் II |
| | | இஸ்லாம் II |
| | | சமஸ்கிருதம் II |
| 13-5-91 | 8-30 - 11-30 | சித்திரம் III |
| | | ஆங்கிலம் II |
| | 12-30 - 3-30 | வர்த்தகமும் நிதியும் I |
| 14-5-91 | 8-30 - 11-30 | புவியியல் I |
| | 12-.0 - 3-30 | வர்த்தகமும் நிதியும் 1 |
| 15-5-91 | 8 30 - 11-30 | புவியியல் II |
| | 12-30 - 3-30 | இந்துநாகரீகம் II |
| | | இஸ்லாமிய நாகரீகம் II |
| 17-5-91 | 8-30 - 11-30 | அரசியல் மூல தத்துவங்கள் I |
| | 1-30 - 4-30 | அளவை, விஞ்ஞான முறை I |
| 18-5-91 | 8-30 - 11-30 | அரசியல் மூல தத்துவங்கள் II |
| | 12-30 - 3-30 | அளவை விஞ்ஞான முறை 11 |

(152)

# இராசி பலன்

22-04-1991

திங்கட்கிழமை

அட்டமி மு. ப. 3.36 வரை பூசம் பி. ப 123 வரை. சித்தயோகம், இராகுகாலம் காலை 7, 31. முதல் 9. 01 வரை. சுப நேரம் பகல் 12.01 முதல் வரை.

மேஷம்:- மனைமுகத்தொல்லை, தொழில் போட்டி, பொதுத்துறை ஈடுபாடு.

இடபம்:- வரவு அதிகரிப்பு, தொழில் லாபம், குடும்பசுகம்,

மிதுனம்: இனசனகுரோதம், வாய்தர்க்கம், காரியதடை

கடகம்:- இனசன உறவு, புதுப்பொருள் சேர்க்கை, தொழில் உயர்ச்சி,

சிங்கம்:- கடும் கோபம், குடும்பபிரிவு, அகாலபோசனம்

கன்னி:- இடமாற்றம், ஆசாரக்குறைவு அலைச்சல்.

துலாம்:- தப்பபிப்பிராயம், கருத்துமோதல் கடன்சுமை,

விருச்சிகம்:- விவாகூலம் நண்பர்கள் தொல்லை, தொழில் பாதிப்பு,

தனுசு:- அந்நியர் நேசம், நோய் பாதிப்பு, வரகிரு கலகம்:

மகரம்:- தொழில் சிறப்பு, மாமானுர் உதவி, பணவரவு.

கும்பம்: மனநிறைவு, அதிகாரிகள் பாராட்டு, குடும்ப மகிழ்ச்சி,

மீனம்:- விரோத உணர்வு, தொழில் கஸ்டம், புத்திரர் செலவு:

- ஜோஸ்யர்

## கருத்தரங்கு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ப. நே. கூ. சங்கமும், தேசிய கூட்டுறவுச் சபையும் இணைந்து இம்மாதம் 27ம் திகதி ப. நோ. கூ, சங்க கிளை முகாமையாளர்களுக்கான கருத்தரங்கொன்றை நடாத்தவுள்ளனர்,

இக்கருத்தரங்கில் பாவனையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கைகள், பொதுசனத்தொடர்புகள், கணக்கு வைக்கும் முறைகள், நிர்வாகத் திறமை பற்றிய விடயங்கள் பற்றி விரிவுரைகள் நடாத்தப்படும் (52)

## நோய்த் தடுப்பு ஊசி

(கொழும்புத்துறை)

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பசுக்கள், கோழிகளுக்கான நோய்த்தடுப்பு ஊசிகள் பிரதி சனிக்கிழமை தோறும் ஏற்றப்பட்டுவருகின்றன. (154)

# "சகலபகுதி மக்களுக்கும் மானிப்பாய் வங்கி உதவியது

(யாழ்ப்பாணம்)

''நாட்டின் இக்கட்டான காலகட்டங்களில், எந்தவொரு வங்கிக் கிளையிலும் பணம் வைப்பிட, மீளப்பெற முடியாத நிலையிலும். யாழ்; மாவட்ட வங்கி நடவடிக்கையாளர்களுக்கும் பணம் வைப்பிட, மீளப்பெறக்கூடிய முறையில் மானிப்பாய் வங்கிக்கிளை இயங்கியது:

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இலங்கை வங்கியின் விசேட கருமபீடத்தை ஆரம்பித்துவைத்த முன்னுள் இந்து கலாசாரமைச் சின்பணிப்பாளர் திரு. எஸ். பூரணலிங்கம் இவ்வாறு கூறினார்.

மாவட்ட முகாமையாளர் திரு. எஸ். கணேசமூர்த்தி. வங்கி முகாமையாளர் திரு. சி. என். நவரட்ணராஜாவும் வங்கியின் விசேட திட்டங்கள் பற்றி உரையாற்றினார்கள்.

வங்கிக் கிளையிலும், விநாயகர் ஆலயக் கருமபீடத்திலும் சிறுவர் சேமிப்புக் கணக்குகளையும், நிலையான வைப்புகளையும் ஆரம்பித்தனர்.

# பத்திரிகையாளருக்கு ஓய்வூதியத் திட்டம்

(கொழும்பு)

பத்திரிகையாளர்களுக்குஓய்வூதியம் வழங்கும் திட்டமொன்று விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இத்தகவலைத் தொழிலமைச்சர் நேற்றுத் தெரிவித்தார்.

சமூகசேவையாளர்கள், எழுத்தாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்குவதற்கும் இத்திட்டம் வழிவகுக்கும் என்றும் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்கள் தங்கள் நிலைமையை அமைச்சுக்குவிளக்கிக் கூறியதைத் தொடர்ந்து அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

## பொலிஸார்சுட்டு ஒருவர் பலி

(புதுடில்லி)

மேற்கு வங்காளத்தில் நடந்த வன்முறை கிளர்ச்சிக்காரர்மீது பொலிஸார் சுட்டதில் ஒருவர் பலியானார்.

வீட்டிலிருந்துகடத்தப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்கள் வீதியில் சடலமாகக் காணப்பட்டதைத் தொடர்ந்து இந்த வன்முறை ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

## வீதி விபத்து: 11 பேர் பலி

(புதுடில்லி)

அசாம் பகுதியில் நடந்த வீதிவிபத்தில் 11 பேர் ஸ்தலத்தில் பலியானார்கள்.

எண்ணை லொறியுடன் பேருந்து ஒன்று மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது. 18 பேர் இந்த விபத்தில் காயமடைந்தனர்.

## ஓய்வுபெற்றார்

(கொழும்புத்துறை)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு. எஸ், சிவசுப்பிரமணியம் பிரதம எழுதுவினைஞராக பருத்தித்துறை மதுவரி அத்தியட்சகர் அலுவலகத்தில்சென்ற 6 வருடகாலமாக கடமையாற்றி சுயவிருப்பத்தின்பேரி இளைப்பாறியுள்ளார். (154)

## நினைவு நிதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் கலாநிதி ஆறுமுகம் (ஸ்கொட்) நினைவு நிதி, அங்கு பயிலும் வசதி குறைந்த மூன்று மாணவர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன: (152)

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

இரத்த தானம் உயிர்காக்கும்என்பது பற்றிவிளக்கவுரையும் கலந்துரையாடலும் வைத்தியர் எம். கருணாகரன் தலைமையில் இம்மாதம் 29-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

உறவினர்களுடன் தினமும் தகராறு செய்துவந்த ஒரு இளைஞர் நச்சுத்திராவகம் அருந்தி தனது உயிரை மாய்த்துக்கொண்டார்:

கோண்டாவிலைச் சேர்ந்த இரட்ணம் ஜெயக்குமார் (28 வயது)என்பவரே நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டவராவர்; (56)

## சாரணர் நற்குணம் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

பளை மகாவித்தியாலய சாரணர் நற்குணத்தின் முதலாண்டு நினைவு தினம் பளை மகா வித்தியாலயத்தில் கொண்டாடப்பட்டது.

திரிசாரணர் அணித்தலைவர் கு. குமரூபன், ஆசிரியை திருமதி இதயராஜன் ஆகியோர் சமாதானத்தூதுவர் ந. நற்குணத்தைப்பற்றி சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

## புதிய நூல் நிலையம்

(பண்டத்தரிப்பு)

பனிப்புலம் அம்பாள் சனசமூக நிலயத்தின் மேல் மாடியில் புதிதாக நூல் நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## அன்பளிப்பு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு உவர்வலய அபிவிருத்திக் கழகத்திற்கு புதிய நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று 'கெயர்' நிறுவனத்தினால் விவசாய அபிவிருத்திக்கென வழங்கப்பட்டுள்ளது (72)

## ஆலயப் பகுதியில் சிரமதானப்பணி

(கொழும்புத்துறை)

மூளாய் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலை அங்கத்தினர்களும், ரோட்டரிக் கழகத்தினரும், சர்வோதயத்தினர்களும் கூட்டாகச்சேர்ந்து ஆலயச் சுற்றுடல்களையும், வீதிகளையும், பூந்தோட்டப் பகுதிகளையும் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்துள்ளனர். [154]

# 'ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நடவடிக்கைஎடுத்துவருகிறோம்'

**- கிளிநொச்சி அரசியல் பொறுப்பாளர் கோபி**

(கிளிநொச்சி)

தமிழீழத்தில் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்குத் தமிழ்மக்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டுமென்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சி. கோபி கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய விளையாட்டுத் திடலில் இடம்பெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அன்னை பூபதி நினைவு விழாவாக திருமதி சோ. செல்வராணி தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது,

அவர் மேலும் பேசுகையில்:- இன்று என்றுமில்லாதவகையில் எமது ஈழப்போராட்டம் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. கிளிநொச்சி, மாங்குளம், கொக்காவில் ராணுவ முகாம்கள் உட்பட பலமுகாம்கள் எம்வசமாகியுள்ளன.

இந்த நிலையில் எமது லட்சியம் ஈடேறும் காலம் வெகு தொலைவில் இல்லை. தமிழ்மக்கள் தரும் இதயபூர்வமான ஆதரவும், ஒத்துழைப்பும் இதைத்துரிதப்படுத்தும். எமது போராட்டம் உதிரம் உயிர் இரண்டாலும் உருவானது என்றார்.

நீதி நிர்வாகப் பொறுப்பாளர் செல்வி குலமகள், ஆசிரியைகள் திருமதி கமலா ஜெயபாலன். செல்வி இராஜேஸ்வரி செல்லையா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

தமிழீழ தேசியப் பாடகர் கலைஞர் சாந்தனின் இசை நிகழ்ச்சியும், கலாசார அவையின் 'பெற்றவளைக் கொன்றவன்' நாடகமும் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது. (73)

# சுகாதார விதிமுறைகளை கடைப்பிடித்தால் மரணங்களைத் தவிர்க்கலாம்

(காங்கேசன்துறை)

''இன்றுள்ளநெருக்கடியான கால கட்டத்தில் சுகாதார விதிமுறைகளை மக்கள் அக்கறையுடன் பின்பற்றினால் தான் மரணங்களைக் குறைக்க முடியும்.

செயற்கை மரணங்களுடன் இயற்கை மரணங்களும் சேர்ந்து எமது சமுதாயத்துக்குப் பாதிப்பு ஏற்பட நாம் இடமளிக்கக்கூடாது. கூடுமானவரை மரணங்களைக் குறைக்க வழிகாணவேண்டும்.''

இவ்வாறு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச்சேர்ந்த மல்லாகம் குளமங்காலில் இடம்பெற்ற சுகாதார வார பூர்த்திநாள் நிகழ்ச்சியில் கலந்துரையாற்றிய தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் கூறினர்.

ஒரு வாரகாலம் நடைபெற்ற இச்சுகாதார வார நிகழ்ச்சியில் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகள்மூலம் சுகாதாரப் பழக்க வழக்கங்கள், விதிமுறைகள், வழிமுறைகள் பற்றியெல்லாம் மக்களுக்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

குளமங்கால் ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் மேற்பார்வை சுகாதார பரிசோதகர் திரு. கே. சிங்கராஜா, சுகாதாரப் போதனாசிரியர் திரு. கே. வைத்தீஸ்வரன் உட்பட பல்வேறு சுகாதாரசேவை உத்தியோகத்தர்களும் பங்குபற்றி கருத்துரைகள் வழங்கினர்கள்.

சுகாதார வாரத்தை யொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோர்க்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (86)

# 'பாடசாலைகளை பாதுகாப்பது மக்களின் கடமையாகும்'

(உடுவில்)

''ஆலயங்கள் எவ்வாறு புனிதமாக வளர்க்கப்பட்டு பேணப்படுகின்றதோ அதே போல பாடசாலைகளையும் வளர்ப்பதும் பாதுகாப்பதும் மக்களுடைய கடமை. ஆலயம், வித்தியாலயம் ஆகியன தமிழ் மக்களின் இரண்டு கண்கள். ஆலயங்களும் பாடசாலைகளும் அருகருகே அமைய காரணமாக அமைந்தது இரண்டையும் நாம் வளர்த்து பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வேயாகும்''

இவ்வாறு சங்குவேலி தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய கல்வி அதிகாரிதிரு சு. இரத்தினராசா கூறினர்.

திரு. ச சண்முகலிங்கம் தலைமையில்போட்டிகள் நடைபெற்றன.

திரு: இரத்தினராசா மேலும் கூறியதாவது: தமிழ் மக்கள் இன்று மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். பல்வேறு இழப்புக்களை கொண்டு இருக்கும் நாம் எமது அழியாத சொத்தான கல்வியை வளர்த்துக்கொள்ள கல்விக்கூடங்களை அழியவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இன்று 6 வீதமான மாணவர்கள் பாடசாலை கல்வியை பெற தவறிவிடுகின்றனர். வாழ்க்கைக்கு தேவையான முழுமைக்கல்வியை பெற எமது சகல பிள்ளைகளையும் பாடசாலைகளுக்கு பெற்றோர் அனுப்புதல் வேண்டும்.

உடுவில் கோட்டக் அதிபர் திருமதி ம திருச்சிற்றம்பலம், சுகாதார அதிகாரி திரு. வை. சோமசேகரம், இளைப்பாறிய அதிபர் திரு. எஸ். தில்லைநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

சிவப்பு இல்லம் முதலாம் இடத்தையும் நீல இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

## துவக்கு வெடித்து காயம்

(யாழ்ப்பாணம்)

மிருகவேட்டைக்காக மருந்தடைத்து தயாரித்த இடியன் துவக்கினை இயக்க முற்படுகையில் தற்செயலாக வெடித்ததில் இடது கை கடும் பாதிப்புக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியை சேர்ந்த பழனிமுத்து அருணாசலம் (52 வயது) என்ற வயோதிபரே இடியன் துவக்கிற்கு இலக்காகியவராவார். (56)

# குர்திஷ் மக்களுக்கான 1வது அகதிமுகாம்

(பாக்தாத்)

வடக்கு ஈராக்கில் குர்திஷ் அகதிகளுக்காக முதலாவது அகதிமுகாம் ஒன்று அமைக்கும் வேலை பூர்த்தியாகியுள்ளது.

பிரான்ஸ், பிரிட்டன் நாடுகள் 7 விமானங்களில் அகதிகளுக்கு நிவாரண உதவியனுப்பி வைத்துள்ளன.

## மின்கம்பத்தில் ஏறியவர் தவறிவிழுந்து காயம்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதியின் மூன்றாவது ஆண்டு நினைவு அஞ்சலி செலுத்துமுகமாக தனது கடைக்கு மேல் கொடிகட்டுவதற்காக மின்கம்பத்தில் ஏறிய இளைஞர் ஒருவர் தவறி விழுந்து காலிலும் கையிலும் கடும்நோ ஏற்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்:

நீர்வேலியை சேர்ந்த செல்லத்துரை அருந்தவராசா (21 வயது) என்ற இளைஞருக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

# தமிழ்நாடு தேர்தல் களம்

## ஜெயலலிதா வேட்புமனுக்கள்

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம், பெரியார் மாவட்டத்திலுள்ள காங்கேயன் தொகுதிக்கும், தர்மபுரி மாவட்டத்திலுள்ள பரகூர் தொகுதிக்கும் வேட்புமனுக்கள் தாக்கல் செய்தார்.

## மு. க. ஸ்ராலின்

தி. மு. க. இளைஞர் குழுத் தலைவர் திரு. மு. க. ஸ்ராலின் ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலுக்காக நேற்று முன்தினம் 25 பேர் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

## பாண்டியன்

முன்னாள் சபாநாயகரும், அ. தி. மு. க. உறுப்பினருமான திரு. சி. எச். பாண்டியனுக்கு தி. மு. கழகம் ஒரு தொகுதியை ஒதுக்கியுள்ளது.

## துணை சபாநாயகர்

தி. மு. க அரசில் துணைசபாநாயகராக இருந்த திரு. துரைச்சாமி அ. தி மு. க வில் சேர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது இவர் அ. தி. மு க. சார்பில் மாநில சட்டசபைக்கு போட்டியிடவிருக்கிறார்

## லோக்சபாவிற்கு

சென்னை லோக்சபா தொகுதிகளுக்கும், தி. மு. க. வேட்பாளர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர். வட சென்னை, தென் சென்னை தொகுதிகளுக்கு வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

## சுயேட்சை வேட்பாளர்

கரூர் தொகுதியில் சுயேட்சை வேட்பாளர் ஒருவரும் நேற்று முன்தினம் வேட்புமனு தாக்கல் செய்தார்.

பழனி தொகுதியில் தி. மு. க. கூட்டணியைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் வேட்பாளர் வேட்புமனுதாக்கல் செய்தார்.

தமிழ்நாடு தேர்தலில் அ. தி. மு. க. அணியும், தி. மு. க. அணியும் நேரடியாக மோதுகின்றன; பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் மற்றொரு அணியும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் அ. தி மு. க. அணிக்கும் தி. மு. க. அணிக்குமிடையிலே போட்டி இடம்பெறும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## திருநாவுக்கரசு அணி

அ தி மு க. விலிருந்து பிரிந்து வந்துள்ள திரு. திருநாவுக்கரசு அணி தி. மு க. வின் ஆதரவுடன் 9 சட்டப்பேரவை தொகுதிகளில் போட்டியிடுகிறது.

## அப்துல் சமத் பிரிவு

அ. தி. மு. க. விலிருந்து விலகிய அப்துல் சமத் பிரிவைச் சேர்ந்த முஸ்லிம் குழு 4 சட்டப்பேரவை தொகுதிகளிலும் 2 லோக்சபா தொகுதிகளிலும் போட்டியிடுகிறது.

## ராஜேந்தர் போட்டி

தி. மு. க. வின் நீண்டகால ஆதரவாளராக இருந்த திரைப்பட தயாரிப்பாளரும், நடிகருமான திரு. டி. ராஜேந்தர் இரு தொகுதிகளில் தான் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளார். இவர் மறுமலர்ச்சிக்கழகம் என்ற பெயரில் புதிய கட்சியொன்றை ஆரம்பித்தார். கடந்த தேர்தலில் தி. மு. க. வை எதிர்த்து இக்கட்சி போட்டியிட்டது.

## அரிசி அன்பளிப்பு

[மாவிட்டபுரம்]

வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் தங்கியுள்ளவர்களுக்கு மார்ச் மாதத்திற்குரிய மதிய உணவுக்குத் தேவையான பதினையாயிரம் ரூபா பெறுமதியான அரிசியை வியாபாரிமூலை விநாயகர் தரும நிதியத்தின் தலைவரும் ஸ்தாபகருமான ஆ. கி. முருகுப்பிள்ளை வழங்கியுள்ளார். (150)

# துறைமுகப் பகுதியில் முதலுதவி நிலையம்

[பருத்தித்துறை]

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் யாழ். செஞ்சிலுவைச் சங்கம் முதலுதவி நிலையமொன்றை திறந்துவைத்துள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலிலிருந்து பொருட்களை இறக்கும் ஊழியர்களின் நலன்கருதியே இம் முதலுதவி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (52)

## அ. தி. மு. க. காங்கிரஸ் கூட்டணியிலிருந்து முஸ்லிம்லீக் விலகியது

[சென்னை]

அ. தி. மு. க - காங்கிரஸ் கூட்டணியிலிருந்து அப்துல் ஸமத் தலைமையிலான இந்திய யூனியன் முஸ்லிம் லீக் விலகிக்கொண்டுள்ளது:

வரவிருக்கும் தேர்தலில் தி. மு. க. தலைமையிலான கூட்டணியுடனும், பாட்டாளி மக்கள் கட்சிக் கூட்டணியுடனும் இணைந்து போட்டியிடப் போவதாக அக்கட்சித் தலைவர் அப்துல் ஸமத் நேற்றுச் சென்னையில் கூறினார். (பூ)

## கைப்பணி பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில்- இணுவில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் இன்று 22ம் திகதி கைப்பணிப் பயிற்சி நிலையம், தொழிலகம் ஆகியவற்றைத் திறந்துவைக்கவுள்ளது.

இன்றைய தினம் மகளிர் குழுவுக்கான பொதுக் கூட்டமும், உற்பத்திப் பொருட்கள் கண்காட்சியும் இடம்பெறவுள்ளன. (56)

## ஜே. ஆர். யப்பான் பயணம்

[கொழும்பு]

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா யப்பானுக்கு விஜயம்செய்யவிருக்கிறார். அங்கு அவரது உருவச்சிலையுடைய கற்சிலையொன்றைத் திறந்துவைப்பார்.

## புதிய அதிபர் நியமனம்

[கொழும்புத்துறை)

யாழ். தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலயத்திற்கு புதிய அதிபராகத் திரு. எஸ். குணவீரசிங்கம் நியமனம் பெற்றுள்ளார். (154)

# ஆப்கான் ஏவுகணை தாக்குதலில் 60 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் அரச குருப்புகள் கிளர்ச்சிக்காரரின் நிலைகள்மீது ஏவுகணை தாக்குதல் நிகழ்த்தியதில் 60 பேர் கொல்லப்பட்டனர். 100 பேர் வரையில் காயமடைந்தனர். கௌடபாத் நகரின் சந்தைப் பகுதியில் வீழ்ந்து வெடித்த இந்த ஏவுகணையால் கடைகள், வீடுகள் என்பன நிர்மூலமாக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

## கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நுழைந்த இனந்தெரியாத கோஷ்டி ஒன்று இருபத்தொரு பொதுமக்களை சுட்டுக் கொன்றதுடன் வீடுகள், வாகனங்கள் போன்றவற்றையும் சேதப்படுத்தினார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நெலுக்குளத்தில் இருந்து 16 மைல் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களே இடம்பெயர்ந்தவர்களாவர்.

தற்போது மடு அகதி முகாமில் 39 ஆயிரம் அகதிகள் தங்கியிருப்பதாக அரச புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

## கலந்துரையாடல்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களுக்கிடையில் நகர்புற அடிப்படை சேவைகள் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று 22-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் யாழ். மாநகரசபை அலுவலகத்தில் நடைபெறும்.

யூனிசெப் நிறுவன அதிகாரிகள் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்தவுள்ளனர். (154)

## பிரதமர் கனடா பயணம்

(கொழும்பு)

பிரதமரும் நிதியமைச்சருமான திரு. டி. பி. விஜயதுங்கா 24-வது ஆசிய அபிவிருத்தி வங்கிகளின் மாநாட்டில் கலந்து கொள்ளுமுகமாக நேற்று கனடா பயணமானார். (க)

## இன்று நிறுவை அளவை முத்திரையிடப்படும்

(கொழும்புத்துறை)

வட்டுக்கோட்டை பட்டின சபைக் காரியாலயத்தில் இன்று தொடக்கம் 26ம் திகதி வரை காலை 8-30 மணி முதல் பி. ப. 1-30 மணி வரையும் நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும். (154)

## பரந்தன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கிழக்கில் மீண்டும் அமைதி ஏற்பட்டதும் பரந்தனில் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# அம்பாறை மாவட்டத்தில் நெற்செய்கை பாதிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக 48 ஆயிரம் ஏக்கர் நெற்காணி தரிசாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 1,47,664 ஏக்கர் காணி நெற்செய்கைக்குரியதாக இருக்கின்ற போதிலும் ஒரு லட்சம் ஏக்கர் நிலத்திலே வேளாண்மை செய்யப்பட்டுவருகிறது.

இப்பகுதியில் நிலவும் அமைதியற்ற சூழலினால் இவ்வேளாண்மைச் செய்கை வெற்றியளிப்பதாக இல்லை என்று விவசாய திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (23-ரி)

# முல்லைத்தீவில் அன்னைபூபதிக்கு நினைவு அஞ்சலி

(மாங்குளம்)

அன்னை பூபதியின் மூன்றும் ஆண்டு நினைவையொட்டி முல்லைத்தீவு மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் உணர்வு பூர்வமான அஞ்சலிகள் செலுத்தப்பட்டன.

இப்பகுதியில் போகபுரம், மல்லாவி, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, மாங்குளம், முறிகண்டிபோன்றபகுதிகளில் சிகப்பு மஞ்சள் நிறக் கொடிகளுடன் தோரணங்கள் பந்தல்கள் அமைத்து அன்னையின் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

சகல கிராமப்பகுதிகளிலும் அகதி முகாம்களிலும் கூட்டங்கள் உண்ணாவிரதங்களும் இடம்பெற்றன. (150)

## க. பொ. த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் பல நிலையங்களில் இணைப்பு அலுவலகங்கள் மேற்பார்வையின் கீழ் பரீட்சை ஒழுங்காக நடைபெறுவதற்கு ஏற்றஒழுங்குகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன என்று வடமாநிலகல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

நாளை விலங்கியல், பிரயோக கணிதம், சரித்திரம் II சரித்திரம் I ஆகியபாடங்கள் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## மேதின

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டிகளை தென் தமிழ் ஈழம் தவிர்ந்த தமிழ் ஈழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடாத்தி வெற்றி பெறுவோருக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கவுள்ளது. [க]

## பயிற்சி

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் வெற்றிபெறும் உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

மாகாணசபைகள் இதற்கான பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

# புலிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு பத்து தமிழ்க் கட்சிகள் வரவேற்பு

[கொழும்பு]

பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி பிரேமதாஸா புலிகளுக்கு விடுத்த அழைப்பிற்கு பத்து தமிழ்க் கட்சிகள் தமது வரவேற்பைத் தெரிவித்துள்ளன.

தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், புளொட், ஈ. பி. டி. பி., டெலோ, ஈ. என். டி. எல். எவ்., ஈ. பி. ஆர். எல். எவ். ஆகிய கட்சிகளே இந்த அழைப்பை வரவேற்றுள்ளன.

## மண்ணெண்ணை விநியோகம்

[உடுவில்]

உடுவில் பிரதேச மக்களுக்கு மருதனார்மடம் பெற்றோல் நிலையத்தில்வைத்து தலா இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் அண்மையில் வழங்கப்பட்டது.

குடும்ப பங்கீட்டு அட்டைகளை காண்பித்து நூற்றுக்கணக்கான மக்கள் மண்ணெண்ணையை பெற்றுக்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் மேற்பார்வையில் லீற்றர் 40 ரூபாவாக வழங்கப்பட்டது. (109)

# பஞ்சாப் - அஸாமில் ஜூன் இறுதிக்குள் தேர்தல்

(புதுடில்லி)

பஞ்சாப், அசாமில் ஜூன் மாத இறுதிக்குள் தேர்தல் நடைபெறுமென்று பிரதமர் எஸ். சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஒரிசாவில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், காஷ்மீரில் தற்போது தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லை என்றார்.

பஞ்சாப் தீவிரவாதிகளுடன் இரகசியப் பேச்சுக்கள் நடத்தியதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியில் எதுவித உண்மையும் இல்லை என்றும் கூறினார்.

# புலிகளின் தாக்குதலால் இராணுவம் நிலைகுலைந்தது!

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த 20ம் திகதி பிற்பகல் 3-00 மணியளவில் மாவிலங்கேணி இராணுவ முகாமில் இருந்து செம்மண்தீவு முகாம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபொழுது, மாவிலங்கேணியில் இருந்து 500 யார் தொலைவில்வைத்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்தனர்.

புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாத இராணுவத்தினர், நிலைகுலைந்து ஓடிவிட்டனர் என்றும் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும், ஆனால் சேத விபரம் எதுவும் திட்டவட்டமாகத் தெரியவரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தரப்பில் யூசி (பேசாலை-மன்னார்) வீரமரணம் அடைந்தார். விடுதலைப் புலிகள் இவருக்குத் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

மேற்படி தாக்குதலில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாக விமானத் தாக்குதலும் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# மரண அறிவித்தல்

## திரு. இசிதோர் சாமிநாதர்

(R, V; D; B; அம்பாறை, முன்னாள் இலங்கை மின்சார சபை சுன்னாகம்)

இவர் திருமதி அந்தோனியர சாமிநாதர் J. P. [முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர்] அவர்களின் அன்புக் கணவரும், நிக்கலின் [இலங்கை வங்கி யாழ். நகர்], வசந்தன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசலெட்சுமியின் வளர்ப்புத் தந்தையுமாவார்.

இவர் காலஞ்சென்ற சுந்தையா இசிதோர், திருமதி அக்கினெஸ் இசிதோர் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி பாக்கியம் ஞானப்பிரகாசம், திருமதி பரிமளம் அல்போன்ஸ் ஆகியோரின் அன்புத் தம்பியும், காலஞ்சென்ற திருமதி மாகிரேற் நல்லையா, திருமதி அம்புஜம் இராசேந்திரம், திரேசம்மா இசிதோர் ஆகியோரின் அன்புத் தமையனும், காலஞ்சென்ற திருமதி திரேசம்மா எலிசபேத் சூசைப்பிள்ளை [அச்சுவேலி], திரு. யோசவ் சவரிமுத்து, திரு. பீற்றர் சவரிமுத்து ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக அன்னாரின் இல்லத்திலிருந்து கொன்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு இன்று (22-04-1991) திங்கட்கிழமை காலை 9-00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி அந்தோனியார் சாமிநாதர் J; P;
"சாந்தி",
150; பரவிஷால் விதி.
யாழ்ப்பாணம்.

(ஏ 4666)

## அரசு-புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு இந்தியா நிர்ப்பந்தம் ஒன்றைக்கொண்டுவருவதுடன் பிரச்சனைக்கு பரிகாரமாக அரசியல் தீர்வொன்றை உருவாக்குவதற்கு மத்தியஸ்த பங்களிப்பு ஒன்றை இந்தியா மேற்கொள்ளவேண்டும்'' என்றும் அவர் கேட்டுள்ளார். (ரி)

## வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இடங்களில் நடந்த மோதலில் இவர்கள் பலியானதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

வடக்கு-கிழக்கில் தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடமும், வெளிநாட்டுத் தூதரகத்துடனும் தொடர்பு கொண்டுவருவதாகவும் எழுத்து மூலமான ஆட்சேபனை இன்று தெரிவிக்கப்படும் என்றும் இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொழும்பில் உவ்வ வீதி ஒன்றில் வி ராஜேந்திரன் என்ற ஊழியர் நடந்துசென்று கொண்டிருந்தபோது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதாகவும், தாம் தூதரக ஊழியர் என்பதை நிரூபித்தும்கூட அதைப் பொருட்படுத்தாது கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுக் கடும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தூதரக அதிகாரி தகவல் வெளியிட்டார்.

## வீர மரணம்

[மன்னார்]

தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த மாதம் 21-ம் திகதி மேற்கொண்ட சிலாவத்துறை இராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் காந்தன் [அருள்மொழி சதிஸ்குமார்] செபஸ்ரியன் வீதி, பாஷையூர் யாழ்ப்பாணம் வீர மரணமடைந்தார்.

விடுதலைப் புலிகள் இவருக்கு தமது வீர வணக்கத்தை தெரிவிக்கின்றனர். (க)

## தாண்டிக்குளம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் 5 பேர் விடுதலைப் புலிகளின் காவலரணை அடைந்தனர்.

இந்த 5 பேரின் பெயர்களும் வருமாறு: லோ. இராணி (வயது 17) காங்கேயன்குளம், க. கௌரி (வயது 10) உதய நகர் கிளிநொச்சி, நா. ஜெயமலர் (வயது 14) மடுக்கோவில், ந. பூமலர் (வயது 37) சாவகச்சேரி, நா. கன்னிகா (வயது 33) புதிய சின்னக்குளம் வவுனியா.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட 3 பொதுமக்களின் சடலங்களையும் காயமடைந்த 6 பேரையும் மத குரு ஒருவர் எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## சமூக காப்புறுதித் திட்டம்

[கொழும்பு]

''நாட்டில் வாழும் சகலருக்கும் பயன்படும் வகையில் சமூக காப்புறுதித்திட்டம் ஒன்றை அமுல் நடத்துவது பற்றி அரசு தீவிரமாக ஆராய்ந்துவருவதாக ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்தார்.

## வன்னிப் பிராந்தியம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லங்களுக்கு முன்பாகவும், பொதுஇடங்களிலும் அன்னை பூபதியின் உருவப் படத்தை வைத்து நஞ்றிக்கடனை செலுத்தினர்கள்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பல்வேறு வெகுஜனப் பிரிவுகளும் கூட்டாக ஒழுங்கமைத்த நிகழ்வு வன்னிப் பிராந்தியத்தில் கிளிநொச்சிநகர், மல்லாவி, கனகராயன்குளம், வட்டக்கச்சி, இரணைஇலுப்பைக்குளம், நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு, முத்தையன்கட்டு, கணேசபுரம், முள்ளியவளை ஆகிய இடங்களில் அஞ்சலிக் கூட்டமும் இரவு கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. மேற்படி இடங்களில் மகரதோரணங்கள், கொடிச்சேலைகள், வர்ணக்கடதாசிகளும் அலங்கரிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Regesteted as a News Paper at the General Post office Sri Lankaunder Licence numper B/100306/81.